குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.43/20

2021 ம் ஆண்டு செப்டம்பர் 17 வெள்ளிக்கிழமை எதிரி தரப்பு சாட்சியாகிய 1 -வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு . கல்யாணசுந்தரம் | வயது | : 46 |
| த/பெ | : மாரியப்பன் | தொழில் | : உதவி சிறை அலுவலர் |
| ஊர் | : மதுரை | சமயம் | : இந்து |
| வட்டம் | : மதுரை | ஜாதி | : |
| மாவட்டம் | : மதுரை | | |

<u>முதல் விசாரணை.</u>

நான் உதவி சிறை அலுவலராக மதுரையில் பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி ராஜராஜேஸ்வரி தனது கணவர் கற்பூரசுந்தரபாண்டியனை மதுரை சென்ட்ரல் பிரிஷன் 1.3.2018-ல் பார்க்க வந்ததற்கு உண்டான ஆவணங்கள் என்ன கொண்டு வந்திருக்கிறேன் என்றால் 2018-ம் வருடம் எங்கள் சிறையில் இருந்த ஆவணங்களை இணைய வழியில் பதிவு செய்வதற்கு உண்டான பணிகள் செய்யப்பட்டது. 1.3.2018 தேதி குறித்து இந்த நீதிமன்றம் அனுப்பிய சம்மனில் கேட்டகப்பட்டிருக்கும் ஆவணங்கள் குறித்த நிலைபாட்டை எங்கள் சிறை சார்பாக கடிதம் மூலமாக சமர்ப்பிக்கிறேன். **<u>மேற்படி கடிதம் எ.ம.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>**

(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி எதிரி தரப்பில் விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

மதுரை சென்ட்ரல் சிறையில் சுமார் 600 சிறை கைதிகள் உள்ளனர். 1.3.2018 தேதி வியாழக்கிழமை அன்று எதிரி எங்கள் சிறையில் சிறை கைதியாக இருந்த தனது கணவர் கற்பூரசுந்தரபாண்டியனை பார்ப்பதற்காக வந்து மற்றும் எதிரியின் தந்தை டி.ஆர்.ரவீந்திரன் அவருக்கு உணவு பொருட்கள் வழங்குவதற்கு சிறை கேன்டினில் பணம் செலுத்தியுள்ளார் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் கூற முடியும். நீதிமன்றத்தின் மூலமாக இந்த எதிரி விண்ணப்பித்து கேட்ட ஆவணங்களை தராமல் அது குறித்து சரியான காரணம் கூறாமல் பொறுப்பின்மையோடு மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சிறை கணிணியில் இருந்ததாகவும், அவை அழிந்து விட்டதாகவும் கூறுகிறேன் என்றால்சரியல்ல. ஏதோ ஒரு காரணத்திற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.